கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு

வாக்குமூல படிவம்

**OS.No.254/2023**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ஸ்ரீமான்சிங்காரம் | வா.சா : | 1 |
| த/பெயர் : | நடராஜன் | தொழில் : | டிரைவர் |
| ஊர் : | நெருப்பெருச்சல் | தாலுக்கா : | திருப்பூர் |
| வயது : | 51 | நாள் : | 14.07.2025 |

சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:–**

1. இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி இன்று இந்நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறாரா என்றால், நான் பார்க்கவில்லை. நான் இன்றைய தேதி வரைக்கும் முருகனை நேரில் பார்க்கவில்லை என்றால், சரிதான். 1ம் பிரதிவாதி மாணிக்கம் என்பவர் வந்துள்ளாரா என்றால், அவரையும் நான் பார்க்கவில்லை. நான் 1ம் பிரதிவாதியையும் இதுவரை நேரில் பார்த்ததில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ1 ஒப்பந்த பத்திரமானது சொத்தை கிரையம் வாங்குவதற்காக போடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 22 செப்டம்பர் 2014 முதல் எனக்கு இந்த சொத்தை கிரையம் வாங்க எண்ணம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ1 ஆவணமான ஒப்பந்த தேதியிலிருந்து நான் இந்த சொத்தை கிரையம் செய்து கொள்ள தயாராக இல்லை என்றால் சரிதான்.

2. நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், கொடுத்த பணத்திற்கு வட்டியோடு கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளபடி 100க்கு 2 ரூபாய் வட்டி போட்டு கொடுக்க வேண்டும் என்று வா.சா.ஆ1 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் இவ்வழக்கை கடன் தொகையை திருப்பி செலுத்தக்கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அவ்வாறு தான் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகளுக்கு என்னிடம் கடன்பெற வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றால், சரியல்ல, என்னிடம் கடன் வாங்கியுள்ளார்கள். கடன் தொகையை நான் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல, நான் தான் கொடுத்தேன். கடன் கொடுக்க வேண்டும் என்றால், அவர்களிடமிருந்து என்னென்ன ஆவணங்களை எழுதி வாங்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது.

3. வா.சா.ஆ1 ஆவணத்தின் படி நான் கடன் கொடுத்த தொகையை திருப்பி கேட்கவில்லை என்றால், சரியல்ல,நான் திருப்பி கேட்டேன். எந்த தேதியில் திருப்பி கேட்டேன் என்றால், எனக்கு தேதி ஞாபகமில்லை. எத்தனை வருடங்களுக்கு முன்பு கேட்டேன் என்றால், எனது தாயார் இறப்பதற்கு முன்பு கேட்டேன். எனது தாயார் இறக்கும்போது தான் வா.சா.ஆ1 ஆவணம் எனக்கு தெரிய வந்தது என்றால், சரிதான். வா.சா.ஆ1 ஆவணத்தை பிரதிவாதிகள் என்னிடமிருந்து கடன் பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்தார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் 2014ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ம் தேதி கடனை பெற்றுக்கொண்டு வா.சா.ஆ1 ஆவணத்தை எழுதிக்கொடுத்ததாக நான் எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான்.

4. இவ்வழக்கு காலவரைமுறை சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் எங்கு குடியிருக்கிறார்கள், என்ன தொழில் செய்கிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் படிப்பறிவு இல்லாதவர்கள் என்பதால் அவர்களின் அறியாமையை பயன்படுத்தி மோசடியாக கிரைய ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. கடன் கொடுத்ததாகவோ, பிரதிவாதிகள் கடன் வாங்கியதாகவோ வா.சா.ஆ1 ஆவணத்தில் விவரங்கள் இல்லாத நிலையில் நான் அவர்களிடம் வழக்கில் சொல்லியுள்ளவாறு வழக்கில் பரிகாரம் கேட்க இயலாது என்றால் சரியல்ல. எனது தாயாரிடம் கடன் பெற்ற பிரதிவாதிகள் அடுத்த 10 நாட்களிலேயே என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால், சரியல்ல, பிரதிவாதிகள் இடம் வாங்க வேண்டும் என்று வாங்கினார்கள்.

5. ஏற்கனவே சொத்து சம்பந்தமாக எனது தாயார் பெயரில் அடமானம் எழுதிக்கொடுத்துள்ள நிலையில், 10 நாட்களிலேயே எனக்கு வா.சா.ஆ1 ஆவணத்தை பிரதிவாதிகள் எழுதிக்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ1 ஆவணமானது எனது தாயாரிடம் பெறப்பட்ட கடனுக்கு பிணையமாக எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

S/d D. Mohankumar,
Additional Subordinate Judge,
Tiruchengode.